★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 பங்குனி 10 ஜ ஆகி 19 இதழ் 41
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23-3-84

## 40 பழைய பஸ், 10 புதிய பஸ் யாழ்ப்பாணம் வருகிறது

(கொழும்பு)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையிலிருந்து வெளி மாவட்டத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நாற்பது பஸ்களும் விரைவில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் மீண்டும் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

இவற்றுடன் புதிய பத்து பஸ்களும் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில், சில மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து நாற்பது பஸ்கள் யாழ் டிப்போவிலிருந்து வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டது தெரிந்ததே.

பஸ் பற்றாக்குறையினால் பிரயாணிகளுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்களை குறித்து வடபிராந்திய போக்குவரத்து சபைத்தலைவர் திரு எஸ். கனகரத்தினம் பலதடவைகள் போக்குவரத்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்து பஸ்களை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கும்படி

(8-ம் பக்கம் பார்க்க)

# 'இந்தியா ருடே' கட்டுரை முழுக்க உண்மை!

# இந்தியா தலையிடுவதை அரசு அனுமதிக்காது!!

## பாராளுமன்றத்தில் பிரதமர்

### 'பொறுமையை இழக்கும் நிலைக்கு இலங்கை இப்பொழுது தள்ளப்பட்டுள்ளது!''

(கொழும்பு)

''இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்திய அரசாங்கம் தலையிடுவதை இலங்கை அரசு ஒருபோதும் அனுமதிக்காது. எத்தகைய சவாலையும் சமாளிக்க இலங்கை தயாராக இருக்கிறது. பொறுமையை இழக்கும் நிலைக்கு இலங்கை இப்போது தள்ளப்பட்டுள்ளது.''

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

''இந்திய சஞ்சிகையான 'இந்தியா ருடே'யில் வட பகுதித் தீவிரவாதிகள் குறித்து வெளிவந்த கட்டுரை நூற்றுக்கு நூறு உண்மையானது. இதுகுறித்து இந்திய அரசாங்கத்துக்கு இலங்கை அரசு அறிவித்துள்ளது'' என்று சபையில் கூறிய பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா மேலும் தெரிவித்தாவது.

''வடபகுதித் தீவிரவாதிகள் தென்னிந்தியாவில் பயிற்சி முகாம்களை அமைத்துப் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்று 'இந்தியா ருடே' என்ற ஆங்கில வார ஏட்டில் வெளிவந்த கட்டுரை உண்மையானது. இது பற்றி முன்னர் நான் பல தடவைகள் இச்சபையில் கூறியது இக்கட்டுரை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அத்தனகல எம். பி லக்ஷ்மன் ஜயக்கொடி:- 'இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் அந்தக்கட்டுரையில் எந்தவித உண்மையுமில்லை என்று கூறுகின்றார்.

பிரதம மந்திரி:- நீர் இந்தியத் தூதுவரையா, என்னையா நம்புகிறீர்?

பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் தொடர்ந்து பேசுகையில்: 'தென்னிந்தியாவிலுள்ள பல முகாம்களில் வடபகுதித் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது'' என்று கூறினார் (வெ)

## பத்திரிகையில் வெளிவர ஏன் அனுமதித்தீர்கள்?''

### சபையில் சரத் கேள்வி

(கொழும்பு)

''வடபகுதித் தீவிரவாதிகள் பற்றி 'இந்தியா ருடே' என்ற ஆங்கில வார ஏட்டில் வெளிவந்த கட்டுரையை ஏன் பத்திரிகைகளில் வெளியிட அனுமதித்தீர்கள். தகுதி வாய்ந்த அதிகாரியின் பின்னணியில் யார் இயங்குகிறார்களென்று தெரியவில்லை''

இவ்வாறு கலவான எம். பி திரு சரத் முத்தெட்டுவேகம நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''கடந்த ஜூலை மாதம் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட செய்தியைப் பத்திரிகைகளில் பிரசுரித்ததனையடுத்தான் கலவரம் இடம்பெற்றது.

''இன்று கொழும்பில் தமிழ் மக்கள் மட்டுமல்ல; சிங்கள மக்களும் சிதறி ஓடினார்கள். விமானப்படை வீரர்கள் இருவர் கொலைசெய்யப்பட்ட செய்தியைப் பத்திரிகைகளில் பிரசுரிக்க ஏன் அனுமதித்தீர்கள்?'' என்றார். (இ-வெ)

## வதந்தியோ வதந்தி!

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை, மருதானைப் பகுதிகளில் நிலவிய வதந்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்று பொலிசார்

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திய உயர் ஸ்தானிகர் முற்றாக மறுக்கிறார்!

(கொழும்பு)

தென் இந்தியாவில் இலங்கை தீவிரவாதிகளுக்கு இராணுவ பயிற்சி அளிக்கப்படுவதாக வெளிவந்துள்ள செய்திகளை இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் எஸ். ஜே. எஸ். சத்வால் ''அடிப்படையே இல்லாத உண்மையற்ற செய்திகள்'' எனக்கூறி நிராகரித்தார்.

இந்திய அரசின் அவசர அழைப்பின் பேரில் புதுடில்லிக்குச் சென்று கடந்த செவ்வாயன்று இலங்கை திரும்பிய திரு. சத்வாலிடம் ''இந்தியா ருடே'' பத்திரிகையில் வெளியான செய்திகள் பற்றி நிருபர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

நான் இந்தியாவில் இருக்கும் போதே 'இந்தியா ருடே' பத்திரிகை செய்தி வெளியாகி இருந்ததாகவும் சம்பந்தப்பட்ட பல்வேறு வட்டாரங்களோடும் நான் தொடர்பு கொண்டு ஆராய்ந்தேன். அப்பத்திரிகையில் வெளியாகியுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையற்றவை என்றும் அவர் கூறினார்.

### பாலஸ்தீன இயக்க தூதுவரின் மறுப்பு

பாலஸ்தீன விடுதலை இயக்கம் இலங்கை தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சியளிப்பதாகக் கூறப்படுவதை இலங்கையிலுள்ள பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் தூதுவர் டாக்டர் கே அப்துல்லா ரஹ்மான் மறுத்துள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கப் போராட்டங்களை ஆதரிப்பவர்கள் பயிற்சி முகாம்களில் சேர்ந்து கொள்ள இடமளிக்கப்படுவதுண்டு ஆனால் தனிப்பட்டவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுவதில்லை என்று தெரிவித்துள்ள டாக்டர் அப்துல்லா ரஹ்மான்; பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் ஜோர்ஜ் ஹபாஸிற்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து கிடையாது. இந்தியாவில் திரு. உமா மகேஸ்வரன் அவரைச் சந்தித்திருந்தால் அதைப்பற்றி அக்கறை கொள்ளவேண்டியதில்லை என்றார்.'' (இ

## இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும்

(கொழும்பு)

''இலங்கையிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட சகல இளைஞர்களுக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்''

இவ்வாறு கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:-

''தென்னிந்தியா இலங்கை மீது படையெடுக்கும் நோக்கத்துடன் வடபகுதித் தீவிரவாதிகளுக்கு அங்கு முகாம்கள் அமைத்து பயிற்சியளித்துவருகின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வதந்தி: ராஜாங்க அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுப் பரவிய வதந்திகளையடுத்து இராஜாங்க அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''எவ்வித ஆதாரமும் இல்லாத வதந்திகளினால் நேற்றுக் கொழும்பில் பெரும் பதட்ட நிலை ஏற்பட்டது.

''இந்த வதந்திகள் நாட்டின் ஏனைய இடங்களுக்கும் பரவியுள்ளது. கொழும்பில் சில விஷமச் செயல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து புறக்கோட்டையிலுள்ள சில கடைகளும் சில பாடசாலைகளும் மூடப்பட்டன. மூடப்பட்ட கடைகள் நண்பகலையடுத்து மீண்டும் திறக்கப்பட்டன.

''இந்த வதந்திகளினால் ஆட்களுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. அவசரகாலச்சட்டத்தின் கீழ் வதந்திகளைப் பரப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

''வதந்திகளைப் பரப்புவோர் பற்றிய தகவல் கிடைத்தால் பொலிசார் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள்'' (வெ)

## யானைகளின் அட்டகாசம்! சுட்டுத்தள்ளுமாறு உத்தரவு!!

(கிளிநொச்சி)

யானைகளின் தொடர் தாக்குதலுக்குப் பலர் பலியாகியதைத் தொடர்ந்து, மதம்கொண்ட யானைகளைச் சுட்டுக்கொல்லுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் சம்பந்தப்பட்ட யானைகளைச் சுடும் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்களிலும் காட்டு யானைகள் படையெடுத்து கிராமவாசிகளைத் தாக்கி அவர்களைப் படுகாயப்படுத்தியும் பலி எடுத்தும் உடைமைகளை நாசம்செய்தும் சொல்லொணா அனர்த்தங்களை விளைவித்து வருவது தெரிந்ததே.

இதுவரை பத்துக்கு மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள் நாசம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யானையின் தாக்குதலுக்கு வட்டக்கச்சியில் நேற்று முன்தினம் பெண் ஒருவர் பலியானார். இவரது மகன் யானையால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றார்.

யானையின் தாக்குதலிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு பல கிராம மக்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு என். ஜெயநாதனைச் சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## ''தீவிரவாதிகளுக்கு சிங்கள மக்கள் இடமளிக்கக்கூடாது''

-- அமைச்சர் லலித்

(கொழும்பு)

''தெற்கின் நிலைமை மோசமாக வேண்டுமெனத் தீவிரவாதிகள் எதிர்பார்க்கிறார்கள். டாக்டர் பாலசிங்கம் ஒருமுறை கூறினார் — தெற்கின் நிலைமை மோசமானால் வடக்கின் தீவிரவாதிகள் அவர்களது இலக்கை அடைவதற்கு இலகுவாக இருக்கும்'' என்று''

இவ்வாறு வர்த்தக கப்பல் துறை அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'தீவிரவாதிகளும் அதையே எதிர்பார்க்கிறார்கள். அதற்கு சிங்கள மக்கள் இடமளிக்கக் கூடாது.

''இன்று பாடசாலைகள் சில மூடப்பட்டன. கொழும்பில் மக்கள் சிதறி ஓடினார்கள். இதே போன்ற நிலைமை நாம் எவ்விதத்திலும் அனுமதிக்கக் கூடாது'' என்றார். (இ-வெ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன இறைச்சிக்கோழிகளும் Broiler முட்டைகளும் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஜிம்மா பள்ளிவாசல் வீதி யாழ்ப்பாணம். 1515

யாழ்ப்பாணம் மாநகரவை எல்லைக்குள் வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியில் சிறிய வீட்டுடன் 6 பரப்பு காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு த. வேலாயுதபிள்ளை சம்பந்தப் பிள்ளையார் கோவிலடி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. 1500

திருநெல்வேலி தெற்கில் நல்ல சுற்றுடலில் பல்கலைக்கழகம், புகையிரத நிலையம், பள்ளிக்கூடம், சந்தை என்பவற்றுக்கண்மையில் வசதியான ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1482, சே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 1482

கிளிநொச்சி பஸ்நிலையத்திற்கு அண்மையில் கண்டி ரோட்டில் 22 பரப்பு காணி விற்பனைக்குள்ளது. வியாபார நிலையங்களுக்கோ - தொழிற்சாலைகளுக்கோ உகந்த இடம். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1475, சே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். [1475]

Transformer அற்றதும் நல்ல நிலையில் உள்ளதுமான 24'' அங்குல Sanyo ரக வர்ண தொலைக்காட்சிப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க: Zion T.V. Engineers 19 செம்மஜேம்ஸ் கிழக்கு ரோட், குருநகர் யாழ்ப்பாணம். 1498

மானிப்பாய் மருதடி சந்திக்கும் மருதனார்மடச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியிலிருந்து குறுக்குரோட்டு முகப்பாகவும் 100 யார் தூரத்தில் உடன் வீடு கட்டவும் கிணற்று வசதியுடன்கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்; விளம்பர இல. 1516, சே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். 1516

உரும்பிராய்க்கும் ஊரெழுவுக்கும் இடையில் காட்டு வைரவர் கோவிலுக்கு அருகாமையில் 18½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. முழுமையாகவோ துண்டுகளாகவோ வாங்கலாம். Factory அமைப்பதற்கும் உகந்தது. தொடர்பு: சமாதான நீதவான் K. C. ஜெயராஜேந்திரன், நம் 7) புதிய நம் 19, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 1527

யாழ்ப்பாணத்தில் இறந்த வியாபாரம் நடக்கும் இடத்தில் கடை ஒன்று விற்பனைக்கு இருக்கிறது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1534, C/o ஈழநாடு, தபால்பெட்டி49, யாழ்ப்பாணம். 1534

## தேவை

10வருட அனுபவம் வாய்ந்த டாக்டர் பிறிஸ்டர் தேவை. குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை. 1522

பிளாட்டிக், அல்லது இரும்பு கட்டர் அச்சியந்திரம் ஒன்று உடனே விலைக்குத் தேவை. விலை விபரங்களுடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1535, சே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 1535

## சேவை

கார், லொறி, சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களுக்கும் மற்றும் கதவுகளுக்கும் மேலதிகத் திறப்புகள் (DuPlicate Key) வெட்டுக் கொள்ள தொடர்புகொள்ளவும்: மினி ரேட்ஸ் சென்ரர், 3. J.M.C பில்டிங், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1503

## பயிற்சி

ரெலிவிசன், வீடியோடெக் றிப்பேறிங், வயறிங், வெல்டிங், Hotel Management செய்முறைப்பயிற்சிகளுடன் நடைபெறும். ஆரம்பம்: 25-03-84. Jaffna Institute Technical, 52/1 கனகரத்தினம் கட்டிடம், (றெயில்வேகடவைக்கருகாமை) ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [1458]

## பிறந்தநாள் வாழ்த்து!



வேலணை வங்களாவடி ஸ்ரீ முருகன் கோவில் சுவேஸ்வரக் குருக்கள் தம்பதிகளின் புதல்வன் இரத்தினவசர்மா நேற்று தனது ஐந்தாவது பிறந்த தினத்தை தங்கை துஷியுடன் கொண்டாடினார். இவரை பெற்றோர் மற்றும் அனைவரும் வாழ்த்துகிறார்கள். 1532

## அணைக்கட்டு வேலை

(துணுக்காய்)

வவுனிக்குளம் அணைக்கட்டில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக நீர்ப்பாசன இலாகா ஊழியர்களும், பொதுமக்களும், சேர்ந்து பல நாட்களாக மணல்சாக்கினைப்போட்டு அணைக்கட்டினைக் கட்டியுள்ளனர். இந்த அணைக்கு சுமார் பத்தாயிரம் சாக்குகள்வரை அடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் நீர்ப்பாசன ஊழியர்வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### சோலைவரி-1ம் கந்தாயம் 1984

1984ம் ஆண்டு முதலாம் கந்தாயத்திற்கான சோலைவரிப் பணம் 2-4-1984ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னதாக மாநகராட்சிமன்றப் பணிமனையில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப்பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின் படி வெளியாக்கத் தண்டப் பணம் அறவிடப்படும்.

வெற்றுக்காணிகள், குடியிருப்புக்காணிகள் —15%

இவையல்லாத காணிகள் —20%

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற்கட்டளைகள் ''யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும் போது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1536

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு: 19 | 11 | 1937



உதிர்வு: 9 | 02 | 1984

### அமரர் திரு. வ. நல்லையா அவர்கள்

(உயர் நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

அன்புடையீர்!

கடந்த 9-2-84 வியாழக்கிழமை தெய்வபதமடைந்த அமரர் திரு வ. நல்லையா அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர் நீதிமன்ற அலுவலகர், நியாயவாதிகள், ஆசிரியர், உறவினர், நண்பர்கள் மற்றும் அனுதாபச்செய்திகள் அனுப்பிய யாவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு எம்மால் எடுக்கப்படும் சபிண்டீகரண வைபவத்திலும் கலந்துகொண்டு அவர் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சபிண்டீகரணம்: இடம் — எமதில்லம்
காலம்: — 24-3-84 சனிக்கிழமை

இலவாக் குறுக்கு திருமதி புஸ்பவதி நல்லையா,
அராலி தெற்கு, சுழிபுரம். சகோதரர்கள். [1491]

HOME FINANCE Ltd.

வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

1. ஒரு L 300 டெலிகா – 6சிற்றர் 1400 C C டிலிவரி வான் பெற்றோல் 1980-ம் ஆண்டு மொடல்
2. நிசன் கரவல் டீசல் — 6 சிற்றர் 1980-ம் ஆண்டு மொடல்

தேவையானவர்களுக்கு கடனுதவி வழங்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்,

82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

திருநெல்வேலி தெற்கு

### திருமதி மனோன்மணி முத்துத்துத்தம்பி

(யா/இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை 1952 — 1983)

தோற்றம்: 25 | 8 | 28



மறைவு: 23 | 3 | 83

''கடமைகள் முடிந்தனவென்று —
எம்மைக் கைவிட்டனையோ''

அன்பு நினைவுகளில் ஏங்கும் கணவர், பிள்ளைகள்.
'மனோகிரி', மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (1520)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி பரமேஸ்வரி குணபாலசிங்கம்

மலர்வு: 2-9-1934 உதிர்வு: 23-3-1984



23-02-1984 வியாழக்கிழமை சிவபதமெய்திய எமது அன்பு மனைவியின் இறுதிச்சடங்குகளில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதலும் தேறுதலும் அளித்த அன்பர்கள் அனைவருக்கும் சிறப்பாக தமது முக்கிய கருமங்களையும் கைவிட்டு செய்தி கேட்டவுடன் ஓடோடி வந்து எமது சோகத்தில் பங்கு கொண்டு எம்மைத் தேற்றிய உற்றார் உறவினர் நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

24-03-1984 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நிகழும்

### சபிண்டீகரணக் கிரியைகளில்

கலந்து அன்னாரின் ஆத்மசாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சி. குணபாலசிங்கம்
[ஆசிரியர், சண்டிலிப்பாய் மகாவித்தியாலயம்]
பிள்ளைகள்: கு. மனோகரன் கு. சிறீதரன். [1519]

# "உறுதிமிக்க மக்களை நெடுங்காலம் அடக்கி ஆளமுடியாது!"

## இந்திராகாந்தி கருத்து!

புதுடில்லி, மார்ச் 22

"உறுதிமிக்க ஒரு இன மக்களை நெடுங் காலம் அடக்கிவைத்து ஆள முடியாது. அவர்களின் சுதந்திர உணர்வு அவர்கள் மீதான ஒடுக்கு முறைகளைக் களைந்தெறியும் வல்லமை கொண்டது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினர்.

நேற்று முன்தினம் சர்வதேச இன ஒடுக்கலுக்கு எதிரான தினம் புதுடில்லியில் அனுஷ்டிக்கப்பட்டது. அத்தினத்தில் உரையாற்றும் போதே திருமதி இந்திரா காந்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

"அணிசேரா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் இன ஒடுக்கலை எதிர்ப்பதுவும் ஒன்றாகும்.

"தென்னாபிரிக்காவில் வெள்ளையர் இன ஆட்சியாளர்களால் ஒடுக்கப்பட்டுள்ள கறுப்பர் இன மக்களுக்கு அணிசேரா இயக்கத்தினதும், இந்தியாவினதும் ஆதரவு தொடர்ந்திருக்கும். அவர்களது விடுதலைப் போராட்டத்தை இந்தியா மதிக்கிறது. உறுதிமிக்க எந்தவொரு இன மக்களையும் நெடுங்காலம் வேறொரு இனம் அடக்கிவைத்து ஆட்சிசெய்ய முடியாது ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திர உணர்வு ஒடுக்கு முறைகளை எவ்வாறெனினும் களைந்தெறியும்

இன ஒதுக்கல் நடவடிக்கை அபாசமானதொன்றாகும். ஜனநாயக உரிமைகளையும், அடிப்படை மனித உரிமைகளையும் மீறுவதாக இது அமைகின்றது.

அணிசேரா இயக்கம் அது ஸ்தாபிக்கப்பட்டகாலம் முதல் தென்னாபிரிக்க பிரிட்டோரிய ஆட்சியின் இன ஒதுக்கல் கொள்கைகளைக் கண்டித்தே வருகின்றது" என்றார். (இ)

## கண்ணிவெடியினுல் சோவியத் எண்ணெய்க்கப்பல் சேதம்!

### அமெரிக்காவே பொறுப்பு என மாஸ்கோவில் குற்றச்சாட்டு!

மாஸ்கோ, மார்ச் 22

நிக்கரகுவாவுக்கருகில் சோவியத் யூனியனின் எண்ணெய்த் தாங்கிக்கப்பலொன்று கண்ணிவெடி ஒன்றினுல் நாசமாக்கப்பட்டது. இச்செயலுக்கு அமெரிக்காவே பொறுப்பாகுமென்று சோவியத் யூனியன் குற்றஞ் சாட்டியுள்ளது.

இக்கப்பல் சேதமாக்கப்பட்ட சம்பவத்தை சோவியத் யூனியன் ஒரு பாரதூரமான குற்றச்செயல் என்று குறிப்பிட்டுள்ளது.

சோவியத் வெளிநாட்டு அமைச்சர் திரு அந்ரே குரோமிக்கோ நேற்று மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதராலயத்துக்குச் சென்றார். அங்கு அமெரிக்கத் தூதரிடம், சோவியத் எண்ணெய்க் கப்பல்சேதத்துக்கு அமெரிக்காவே பொறுப்பெனக் குற்றஞ்சாட்டினார். இச்சம்பவம் தொடர்பாக அமெரிக்காவின் விளக்கங்களை சோவியத் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். சோவியத்தின் கண்டனத்தை திரு. குரோமிக்கோ எழுத்து வடிவில் சமர்ப்பித்தார். [இ]

## நீர்மூழ்கி விமானந்தாங்கி மோதல்

லண்டன், மார்ச் 22

அமெரிக்காவின் விமானந்தாங்கிக் கப்பலான 'கிட்டிஹோக்' சோவியத் நீர்மூழ்கிக் கப்பலொன்றினுல் சிறிது சேதமாக்கப்பட்டது. இச்சம்பவம் ஜப்பானுக்கருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலின் சேதம் பெரியளவில் ஏற்படவில்லை. இதனுல் கப்பல் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கவில்லை. அத்துடன் அதிலிருந்த கடற்படை வீரர்களும் எதுவித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை.

சோவியத் நீர்மூழ்கியினுல் ஏற்பட்ட சேதம் ஒரு நாசவேலையா அல்லது எதிர்பாராத விதமாக ஏற்பட்டதா என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (இ)

## இந்திய துறைமுக வேலை நிறுத்தம்

புதுடில்லி, மார்ச், 22

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் இந்தியத் துறைமுகத் தொழிலாளர்களின் தொழிற்சங்கத் தலைவர்கள் அரசதரப்பினருடன் பேச்சுக்களை நடத்த முன்வந்துள்ளனர்.

நேற்று இத்தலைவர்கள் சிலர் இந்திய கப்பல்துறை அமைச்சரைச் சந்திக்க புதுடில்லி வந்து சேர்ந்தனர்.

இந்தியத் துறைமுகங்களில் வேலைநிறுத்தம் தொடர்ந்தும் இருந்துவருகின்றது. உருக்குத் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்களுக்குச் சமமாகத் தமக்கும் நாற்பது சதவீத சம்பள உயர்வு தரவேண்டுமென்றே துறைமுகத் தொழிலாளர்கள் கேட்டு வருகின்றனர்.

இதேவேளை இந்தியாவின் முக்கிய துறைமுகங்களில் அத்தியாவசிய வேலைகளைக் கடற்படையினரே மேற்கொள்கின்றனர் பம்பாய் துறைமுகத்தில் நேற்று முன்தினம் மசகு எண்ணெயைக் கடற்படையினரே கப்பலிலிருந்தும் கரை சேர்த்தனர். (இ)

## செய்திச் சிதறல்

### நமது நிருபர்கள்

**வங்கிக் கிளை மாற்றம்**

(மன்னூர்)

முருங்கன் வங்கிக்கிளை மூடப்பட்டதையடுத்து மன்னூர் மக்கள் வங்கிக் கிளையின் ஒருபகுதியில் முருங்கன் வங்கிக் கிளையாக இயங்கிவருகிறது.

முருங்கன் பகுதியைச்சேர்ந்த வாடிக்கையாளர்களின் நலன் கருதியே மன்னூர் வங்கிக்கிளையில் முருங்கன் மக்கள் வங்கிக் கிளைக்கென தனியானதொரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. (சு)

**லொறியில் பணம் திருட்டு**

(மன்னூர்)

மன்னூரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வெளியூரைச் சேர்ந்த லொறி ஒன்றிலிருந்து 10685 ரூபா பணம் இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட பணம் தேங்காய் விற்பனை மூலம் கிடைத்ததென மன்னூர் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

அன்மையில் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவம் பற்றி மன்னூர் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ் திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிசார் புலன்விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**கலாசாரக் கிளை அங்குரார்ப்பணம்**

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்து இளைஞர் கலாசாரப் பேரவையின் கிளையொன்று உதயநகரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. விசாகி வைத்தியர் அ தமோதரம்பிள்ளை பிரஸ்தாப கலாசாரப் பேரவையின் செயலாளர் க. காணலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

**புதிய அதிபர்**

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக செல்வி ஆர். கிளைஅந்தம்பி நியமனம்பெற்றுள்ளார். இவர் முன்னர் கிளிநொச்சி கனகபுரம் வித்தியாலய அதிபராகச் சிலகாலம் கடமையாற்றினர்

**பண்ணிசை வகுப்பு**

(வேலணை)

தெல்புரம் மத்திய இந்து இளைஞர் சனசமூக நிலைய மன்றத்தின் தலைவர் திரு. நா முத்தையா தலைமையில் தெல்புரம் ஆதிமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் பண்ணிசை வகுப்புகளை நடாத்தி வருகின்றனர்

**புத்தூர் கிழக்கில் நல்லுறவுக் குழு**

(வண்ணார்பண்ணை)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த புத்தூர் கிழக்கு பொலிஸ்-பொது மக்கள் நல்லுறவுக்குழு இயங்கத் தொடங்கியுள்ளது.

செயலாளர் திரு எஸ். ஆறுமுகம் குழுவின் தலைவராக முன்னுள் உதவி அரசாங்க அதிபர் க. வேசநம்பி, இக்குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் எஸ். தாமோதரம்பிள்ளை, அ சிவபாதம், க. மாப்பாணர், கி. சண்முகம், இ. கந்தசாமி ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

**ரூ. 21 லட்சம் ஒதுக்கீடு**

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமுலாக்கப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் இவ்வருட அபிவிருத்தித் திட்டங்களுக்கு மொத்தம் 21 லட்சத்து 6 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது கல்வி, மின்சாரம், வீதி புனரமைப்பு, ஆகியவற்றிற்கே இந்த நிதி ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

## எம். ஜி. ஆருக்கு 7 மாதத்தில் மற்றுமொரு டாக்டர் பட்டம்

சென்னை, மார்ச் 22

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனுக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டமொன்றை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது- இவ்டாக்டர் பட்டம் இப்பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்புவிழாவில் வழங்கப்படும்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் திரு. எம் ஜி. இராமச்சந்திரனுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியிருந்தது. அதன் பின்னர் இரண்டாவது தடவையாக ஏழு மாத காலத்தில் தஞ்சைப் பல்கலைக்கழகமும் இவ் டாக்டர் பட்டத்தை அவருக்கு வழங்குகிறது.

இப்பட்டம் திரு. எம். ஜி ஆரின் சமூக சேவைகளைப் பாராட்டும் விதத்திலேயே வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இசைக் கலைஞர் ஒருவருக்கும், சிற்பக் கலைஞர் ஒருவருக்கும் தஞ்சைப் பல்கலைக்கழகம் இவருடன் சேர்த்து சிறப்புப் பட்டங்களை வழங்குகின்றது. (இ)


**ஹோம் பினுன்ஸ் லிமிட்.**

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-00 யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

தினசரி மாலை 7-45 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பினுன்ஸ் லிமிட்.
   இல: 82, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 24310
2. நியூ ப்ரசிதா
   இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 22480
3. நியூ லங்கா அலுமினியம் இன்டஸ்றீஸ்
   இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 23596
4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
   இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பினுன்ஸ் லிமிட். 463, காலி வீதி, கொழும்பு-3 தொலைபேசி: 589190—587680
2. டையமன் ஸ்ரோர்ஸ் வெள்ளவத்தை.



**வாகன சொந்தக்காரர்களே !**

நம்பிக்கையான சேவை ✯ திறமையான சேவை

அனுபவத்தில் சிறந்த தொழிலாளர்களினுல் 19-03-84லிருந்து எமது சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**சேவிஸ் ஸ்ரேசன்-மல்லாகம்**

1526

# 86-வது சென்றல் - சென்.ஜோன்ஸ் மாபெரும் கிரிக்கெட் மோதல்

(விளையாட்டு நிருபர் "தேவா")

(யாழ்ப்பாணம்)


வடமாகாணத்திலேயே மிகப் பெரிய கிரிக்கெட் போட்டியெனக் கருதப்படும், சென். ஜோன்ஸ் - சென்றல் கல்லூரிகளின் 86-வது வருடாந்த மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

சென்றல் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இப் போட்டி, இம்முறை பலத்த பலப் பரீட்சையாக இருக்கும் என கிரிக்கெட் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்த இரு கல்லூரிகளும் இம்முறை கலந்துகொண்ட கிரிக்கெட் போட்டிகள் எதிலுமே தோல்வி அடையாத நிலையிலேயே இருக்கின்றன.

இவ்விரு கல்லூரிகளிலும் சிறந்த துடுப்பாட்ட வீரர்களும், பந்து வீச்சு வீரர்களும் இருக்கின்றார்கள். இவை அனைத்தையும்விட, இவ்விரு கோஷ்டிகளின் அணித்தலைவர்களும், கிரிக்கெட் ஆட்டத்தில் மிகுந்த அனுபவசாலிகளாக இருப்பதினால், இப்போட்டியின் முடிவு எப்பக்கம் சாதகமாக இருக்கும் என்று கூறமுடியாவிட்டாலும், கடந்த 11 வருடங்களாக இப்போட்டி வெற்றி - தோல்வியின்றியே முடிவடைவதைப்போல, இம்முறை இருக்காது என்று நிச்சயமாகக் கூறமுடியும்.


இதுவரை காலமாக நடைபெற்ற இப்போட்டியில், சென். ஜோன்ஸ் 31 தடவைகளும், சென்றல் 20 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 26 தடவைகள் ஆட்டம் வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.



சென்றல் கிரிக்கெட் அணி

## சென்றல் கிரிக்கெட் அணி வீரர்களின் பெயர் விபரம்

வி. சுதர்சனன் (காப்டன்), கே. ஜனேந்திரகுமார், எஸ். மதிவதனன், எஸ். ஏ. அன்ரு இரேஸியன், ரி. ரவிராஜ், கே. ஜெனககுமார், கே. ராஜசேகர், ரே. விஜயானந்தன், கே. கருணராஜா, பி. கணேஸலிங்கம், டபிள்யூ. ஏ. நியூட்டன், ரி. சங்கர், ரி. நிரஞ்சன், இ. பிரபாகரன், வி. விசாகேஸ்வரன்.



சென். ஜோன்ஸ் கிரிக்கெட் அணி

## சென். ஜோன்ஸ் கிரிக்கெட் அணி வீரர்களின் பெயர் விபரம்:

பி. திருக்குமரர் (காப்டன்), வை. முரளீதரன், எம். ஜே. ஜோர்ச், ஐ. கதிர்காமநாதர், கே. சந்திரசேகரம், எஸ். நிஸாந்தன், ரி. குருகுலன், ரி. எஸ். பாட்லர், எஸ். சந்திரகுமார், ஏ. சுமந்திரன், ஏ. வாகீசன், பி. ஜெயவீரசிங்கம், ஜே. ஏ. ஆனந்தராசா, ஏ. புஸ்பகுமார், எம். கோகுலேந்திரன்.

## சென்றல் அணி விபரம்

இம்முறை சென்றல் அணிக்கு வீரர் வி. சுதர்சனன் தலைமை தாங்குகின்றார். கிரிக்கெட் உலகில் நான்கு வருட அனுபவம் உள்ள இவர் வடமாகாணப் பாடசாலைக் கிரிக்கெட் வீரர்களிலேயே சிறந்த துடுப்பாட்ட வீரராகத் திகழ்கின்றார். இவர் இதுவரை மூன்று 'செஞ்சரிகள்' அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமது கல்லூரியின் கிரிக்கெட் விருதைப் பெற்ற இவர் ஆரம்ப அதிவேகப் பந்துவீச்சாளராகவும், சூழ்நிலைக்கேற்ப சுழல்பந்து வீச்சிலும் வல்லவர்.

## சென். ஜோன்ஸ் அணி விபரம்

இம்முறை சென். ஜோன்ஸ் அணிக்கு வீரர் பி. திருக்குமரர் தலைமை தாங்குகின்றார். ஆரம்ப வேகப் பந்து வீச்சாளரான இவர், கிரிக்கெட் உலகில் மூன்று வருட அனுபவம் உடையவர். சிறப்பாகத் துடுப்பெடுத்து ஆடுவதில் சிறந்தவரான இவர், கடந்த வருடம் 19 வயதுக்குட்பட்ட அகில இலங்கை பாடசாலைத் தெரிவுக் கோஷ்டிக்கு தெரிவு செய்யப்பட்டவர். தமது கல்லூரியில் விளையாட்டுத்துறைக்கென வழங்கப்படும் உயர் விருதையும் பெற்றவர்.

## ஆட்டநேர விபரங்கள்

இவ்விரு அணிகளுக்குமிடையிலான இன்றைய ஆட்டம் காலை 9-30-க்கு ஆரம்பமாகி 12-30-க்கு மதிய போசனத்திற்காக இடைநிறுத்தப்பட்டு மீண்டும் 1-30-க்கு ஆரம்பமாகி 3-10-க்கு தேனீருக்காக இடைநிறுத்தப்பட்டு மீண்டும் 3-30-க்கு ஆரம்பமாகி 5-40-க்கு நிறுத்தப்படும். (வி)

## மாணவர்களுக்கு பொலிஸார் ஆலோசனை

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும் சென். ஜோன்ஸ் - சென்றல் கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டியின் போது மாணவர்கள் வீதிகளில் தங்கள் கல்லூரிக் கொடிகளை கொண்டு வரக்கூடாதென பொலிஸாரினால் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதியில் கொடிகளுடன் ஊர்வலங்களில் செல்வது ஆபத்தானதாக வீதியில் செல்லும் பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக் கூடாதென்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுலோக அட்டைகளை கொண்டு செல்லும் போது, பொது மக்களுக்கு கஷ்டம் ஏற்படக்கூடாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஓர் இறை சேவகி மறைவு



சமூகப்பணியிலும், விருந்தோம்பும் பண்பிலும் உயர்ந்த நிலையில் துலங்கிய திருமதி மனுவல் செபஸ்ரியன் இம் மண்ணுலகை நீத்தபோதிலும் பலரோர் நெஞ்சங்களிலும் அவர் பசுமையுடன் வாழ்வார். இவரது கணவர் முன்னாள் நீதிமன்றச் சக்கடத்தாரானவர்.

யாழ் புனித யாகப்பர் தேவாலய பங்கு மரியாயின் சேனையில் தொண்டாற்றிய இவர் கோவிலில் நிகழும் திருப்பணிகளில் நாட்டமுள்ளவராய், வாழ்வில் துன்பப்பட்டோர்க்கும், துயரப்பட்டோர்க்கும் உறுதுணை புரியும் தருமசீலியாய் வாழ்ந்தார். தம்மைப்போல் தம்மக்களையும் பிறர்க்கு உதவும் பண்புடையோராய் வளர்த்து எல்லோரின் நெஞ்சங்களையும் சார்ந்திருந்தார்.

இவரின் பிரிவு உறவினர்க்கும் பல்வேறு சமூகத்தவர்க்கும் பேரிழப்பாகும். —அன்பின்

ஐஸ் சொக்ஸ், ஐஸ் கிறீம், குளிர்பானங்கள் ஏனைய
"எலிபன்ட் ஹவுஸ்"
உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எங்கள் ஸ்தாபனத்தில்
தற்போது பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23438, 22876, 22587 [1589]

# "மக்களின் முன்னேற்ற வாழ்வுக்கு நூலகங்களின் பங்களிப்பு"

## யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கருத்து

(புலோலி)

"மக்களின் அறிவை மேம்படுத்தி அவர்களைச் சிறந்த பிரஜைகளாகத் திகழச் செய்வதற்கு நூலகங்கள் மிக இன்றியமையாத சாதனங்களாக விளங்குகின்றன. எனவே நூலகங்கள் சிறப்பாக இயங்க வேண்டியது மிகமுக்கியமாகின்றது. இப்பொதுசன நூலகத்திற்கு மின் ஒளியை இன்று ஏற்றிவைப்பதில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்."

இவ்வாறு யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப-அலுவலக பொதுசன நூலகத்திற்கு மின்ஒளியை ஏற்றிவைத்து உரையாற்றிய யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் குறிப்பிட்டார். இவ்வைபவத்திற்கு புலோலி உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எம். அருணாசலம் தலைமைதாங்கினார். விழா ஆரம்பத்தில் புலோலிச்சந்தியிலுள்ள தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் சிலைக்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. பொன்னையா மலர்மாலை அணிவித்தார். புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலய அதிபர் திரு வீ சே ஏகாம்பரநாதன், பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தலைவர் திரு மு. பொ. வீரவாகு ஆகியோர் மங்களவிளக்கேற்ற நூலகப் பொறுப்பாளர் திரு எஸ். திருச்செல்வத்தின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமானது தொடர்ந்து உரையாற்றிய திரு. அன்ரன் அல்பிரட் குறிப்பிட்டதாவது.

மக்கள் தமது அறிவைமேம்படுத்துவதற்காக கல்வியறிவை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டும். தாம் பெற்ற கல்வியறிவை வாழ்க்கையில் அனுசரிக்கவேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உதவிச் செயலாளர் திரு எஸ் பரமநாதன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

எமது பகுதியின் அபிவிருத்தியை நாம் அரசாங்கத்திடம் நம்பியிராது எமது சுயமுயற்சிகள் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். கிராமிய அபிவிருத்தியில் நூலகங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. நூலகங்களே ஏழைகளின் பல்கலைக்கழகங்கள். இந்நூலகத்தில் சிறுவர்பகுதி ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும். அதற்கு சமூகசேவையாளரும் தொழிலதிபருமான திரு. வீரவாகு போன்றோர் முன்வரவேண்டும்.

அதிபர் திரு வீ. சே. ஏகாம்பரநாதன் தனது உரையில் குறிப்பிட்டதாவது.

இப்பகுதியில் கந்தமுருகேசனார் பலரை அறிஞர்களாக்கினார். இப்பொதுசன நூலக ஒளியூட்டு விழாவின் ஆரம்பத்திலே கந்தமுருகேசனார் சிலைக்கு மலர்மாலையணிவித்தது தனிப்பெருஞ்சிறப்பும் பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டதாகவிருக்கின்றது

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எம். அருணாசலம் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது.

யாழ் உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு என். ரீ. மார்க்கண்டு, யாழ். அபிவிருத்திச்சபைக் கணக்காளர் திரு. எம். இராஜேந்திரம், உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் திரு. எம் குமாரதாசன், ஆய்வு உத்தியோகத்தர் திரு பீ. எம். யோசேப், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயில்வேறும்பெருமாள், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வீ. கே. சகரபாதம், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பொதுமுகாமையாளர் திரு. சோ. அருணகிரி ஆகியோரும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். யாழ். அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலக லிகிதரும் சமூகசேவையாளருமான திரு. ஆ. புண்ணியமூர்த்தி (தென்புலோலியூர்) நன்றியுரை வழங்கினார்.

# இன்றைய பலன்

(ஆவணி மாதம் 10-ம் திகதி 23—8—84) வெள்ளிக்கிழமை

மேடம்: எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம் பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுவோர்களுக்கு அதிக பலன் ஏற்படும் நீண்ட நாள் எதிர்பார்த்த பொருள் வரவு இன்று கிடைக்கும் அறிஞர் ஆலோசனையும் கிடைக்கலாம்.

இடபம்: வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும் பிறர் புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும் உடல்நலன் பாதிக்கப்படலாம் பெண்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

மிதுனம்: உணர்ச்சிமயமான தினம் மனப்போராட்டங்கள் நடைபெறும் உடல் நலனும் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

கடகம்: கொள்வனவுகளில் நல்ல திருப்பங்கள் ஏற்படும் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு கல்வித் துறையில் முன்னேற்றம் தென்படும் அறிஞர்கள் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

சிம்மம்: மகிழ்ச்சிகரமான தினம் குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் களைப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவர் மீண்டும் சந்திப்பார் கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## கிண்ணியா கொலைவழக்கில் தீர்ப்பு

# மாணவனுக்கு மரணதண்டனை

(திருகோணமலை

கொலை வழக்கொன்றில் எதிரியான மாணவனுக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி கே. பாலசிட்ணர் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஆசிரியரைத் தலைவராகக் கொண்ட தமிழ்ப் பேசும் ஜூரி சபையின் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது.

கிண்ணியாவைச் சேர்ந்த பாடசாலை மாணவரான மொகமட் ஹனிபா முபாரக் (16 வயது) என்ற பாடசாலை மாணவனை, உமர் லெப்பை அஹ்ரம் (17 வயது) என்ற மாணவன் கூரிய ஆயுதமொன்றினால் குத்திக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி கே. பாலசிட்ணர் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணை செய்தார்.

வகுப்பில் நடந்த ஒரு பிரச்சினை கொலையில் முடிந்ததென சாட்சியங்களிலிருந்து தெரிய வந்தது.

மரண தண்டனை தீர்ப்பை வழங்கியபின்னர் குற்றவாளியிடம், "ஏதாவது சொல்ல விரும்புகிறீரா?" என்று நீதிபதி கேட்டபோது, "நான் மாணவன். தொடர்ந்து படிப்பதற்கேற்ற முறையில் தங்களுக்கு வழங்கப்பட்ட சலுகையைக்கொண்டு ஆவனசெய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்றார். [சு]


உ

முருகா

சீமெந்து பாவனையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும்

# ஓர் நற்செய்தி!

# சீமெந்து விநியோகம்

உங்களுக்குத் தேவையான லங்கா சீமெந்து சில்லறையாகவும், மொத்தமாகவும் கட்டுப்பாட்டு விலைக்கு (ரூபா 110/-) பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

**வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு தரப்படும்.**

யாழ். மாவட்டத்தில் உள்ள வேலைத்தளங்கட்கும், வீடு வரையும் குறிப்பிட்ட இடங்களில் இலவச போக்குவரத்து (Free Transport) செய்து தரப்படும்

**பணம் செலுத்தி 24 மணித்தியாலத்திற்குள் விநியோகம் நடைபெறும்**

எமது ஸ்தாபனத்தின் கீழ் இயங்குவதற்கு சப் ஏஜன்சிகள் கோரப்படுகின்றனர்

மேலதிக விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்புகொள்ளவும்

**சி. சரவணபவன்**

இல. 1, செட்டித் தெரு,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23615, 24436

# "கனடாவில் கைதிகள் சித்திரவதை"

## சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள தகவல்

லண்டன், மார்ச், 23

1982-ம் ஆண்டு கனடாவின் கியூபெக் மாநிலத்தில் சிறைக் கூடமொன்றில் கலவரமொன்று இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து அச்சிறைச் சாலையில் பலகைதிகள் சித்திரவதைப்படுத்தப்பட்டதுடன் உரியமுறையில் பராமரிக்கப் படவில்லையெனவும் இதற்கு ஆதாரபூர்வமான பல தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் சர்வதேசமன்னிப்புச்சபைதெரிவித்துள்ளது.

இத்தகவல்களை அடிப்படையாக வைத்து கனடா அரசாங்கத்துக்கு சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையொன்றை அனுப்பிவைத்தது. அவ்அறிக்கையில் நியாயமான பூரண சுதந்திரமுள்ள விசாரணை ஒன்றை 'ஆர்ச்சம்போல்ட்' என்ற அந்த கியூபெக் மாநில சிறைக்கூட சம்பவங்கள் குறித்து நடத்தும்படி சபை கேட்டிருந்தது.

1983ம் ஆண்டு ஆகஸ்டில் விசாரணைகள் ஆரம்பிக்கப் படவிருப்பதாக அறிவிக்கப் பட்டது. ஆனால் அவ்விசாரணை அறிக்கைகள் இதுவரை பகிரங்கப்படுத்தப்படாத இவ்வேளை சர்வதேச மன்னிப்புச் சபை அச்சிறைக்கூட சம்பவங்கள் பற்றி தனக்குக் கிடைத்த தகவல்களை வெளியிட முன்வந்துள்ளது.

'ஆர்ச்சம்போல்ட்' சிறைக் கூடத்தில் கைதிகளை பிரித்து வைக்கும் பிரிவிலேயே பல சித்திரவதைகள் இடம்பெற்றன. 'வாயினுள் கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்தது. நிர்வாணமாகக் கைதிகளை மூன்று வாரங்கள் அவர்களது கூடங்களில் வைத்திருந்தது. கைதிகளைத் தூங்கவிடாது தடுத்தது, உணவு விநியோகத்தில் தடங்கல் செய்தது' என்பன அங்கு நடைபெற்றதாக கூறப்படும் சில விஷமச்செயல்களாகும்.

மூன்று கைதிகளின் தலைகளில் ஈரமான துவாய்களைச் சுற்றி அவர்களை மூச்சுத்திணறும்வகையில் அத்துவாய்களின் பிடியை இறுக்கியதாகவும் கூறப்பட்டது.

இச்சித்திரவதைகள் பற்றி அமெரிக்க சட்டத்தரணி ஒருவரும், பிரெஞ்சு வைத்தியர் ஒருவரும் சர்வதேச மன்னிப்புச் சபை சார்பில் கனடா சென்று தகவல்களைச் சேகரித்தனர். அவர்கள் பல உண்மையான முறைப்பாடுகளை அங்கு சிறைக்கைதிகளையும் அவர்களது குடும்பத்தினரையும், சிறை அதிகாரிகளையும் சட்ட அறிஞர்களையும் பேட்டிகண்டு சேகரித்தனராம்.

# இப்படியும் நடக்கிறது

இடம்: ஓர் வாசிகசாலை.

பாத்திரங்கள்: (1) நாற்பது வயதுள்ள நபர் ஒருவர்
(2) ஐந்து வயதுள்ள சிறுமி ஒருத்தி.
(சிறுமியை நீங்கள் குழந்தை என்றும் கொள்ளலாம்)

காட்சி:......!

நினைக்கவே கூசுகிறது! எப்படி அக்காட்சியை எழுதுவது?

இஃதுரா ராமஜ ஒரு குழந்தையா அந்த ஆசாமிக்குக் கிடைக்க வேண்டும்?

விளைவு: யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் அந்தப் பிஞ்சுக்குழந்தை இப்பொழுது சிகிச்சை பெற்று வருகிறது!

"சமூகத் துரோகிகள்" இருக்கிறார்கள். அதற்கு மேல் ஏதாவது 'பட்டம்' கொடுக்கக் கூடியமாதிரி ஏதாவது பெயர் இருக்கிறதா?

"ஊடுருவி"

## மோட்டார் சைக்கிள் மோதி 5 வயதுச் சிறுமி பலி!

### சந்தேகநபர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

பாலர் பாடசாலையிலிருந்து தனியாக வீடு திரும்பிக்கொண்டிருந்த 5 வயதுச்சிறுமி மோட்டார் சைக்கிள் விபத்தில் பலியானார்!

பருத்தித்துறையைச் சேர்ந்த விஜயரத்தினம் விஜிதா என்ற சிறுமியே பலியானவராவர்.

யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. க. சேசவன் நேற்றுக்காலை மரண விசாரணை நடத்தினார்.

காலையில் பெற்றியார் சிறுமியை, பாலர் பாடசாலைக்குக் கூட்டிச்செல்வது வழக்கமென்றும், நண்பகல் தனிமையில் வீட்டுக்குச் சிறுமி திரும்புவார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

தெருமூடி மடத்தருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று சிறுமியைமோதிவிட்டு சென்றுவிட்டதாக கூறப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனை நடத்துமாறு சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவானுக்கு உத்தரவிட்டார்.

சந்தேக நபரை கைதுசெய்து ஆஜர் செய்யும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார் (...)

## அரச அதிபருக்கு யாழ் செயலகத்தில் பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு தேவநேசன்நேசையாவுக்கு இன்று பிற்பகல் 2 30 மணியளவில் யாழ். செயலக வெளி வளவில் பிரியாவிடை வைபவம் பரந்தளவில் நடத்தப்படவுள்ளது

இவ்வைபவத்தில் திரு தேவநேசன் நேசையாவின் உருவப் படம் திறந்துவைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் யாழ் செயலக மேலதிக உதவி அரசாங்க அதிபர்கள், உயர் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (மா)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இன்று பிற்பகல் இடம்பெற இருந்த ஈழநாடு வெள்ளிவிழாக் கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அவசரகாலச்சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலசட்டம் நேற்றும் பாராளுமன்றத்தில் மூன்றிரண்டுபங்கு பெரும்பான்மை வாக்குகளால் நீடிக்கப்பட்டுள்ளது. (வெ)

## வதந்தியோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர்.

ஆனாலும் பெருமளவில் பரவிய வதந்திகளையடுத்து புறக்கோட்டையிலுள்ள பல கடைகளும், கொழும்பு வடக்குப் பகுதிகளிலுள்ள சிலபாடசாலைகளும் நேற்று நண்பகலுடன் மூடப்பட்டன. பொலிசாரின் கோரிக்கை மீது கடைகள் நேற்றுப் பிற்பகல் திறக்கப்பட்டன.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக இப்பகுதிகளில் பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டன. (வெ)

## குமாரசூரியர் புதிய கட்சியில்!

(கொழும்பு)

கடந்த சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் தபால் தந்தி தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த திரு. செல்லையா குமாரசூரியர் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் சேர்ந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து பிரிந்த ரி பி இலங்கரத்ன, விஜயகுமாரணதுங்க குழுவினர் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை ஆரம்பித்தனர்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6 00 நாட்டு வளம் (தமிழ்)
6-05 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-35 சிறுவர் இசை நிகழ்ச்சி (சிங்களம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இளைஞர் விவகாரம் (சிங்களம்)
7-45 சிங்கள நாடகம்
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 அறிமுக நிகழ்ச்சி (சிங்களம்)
9-05 ஆங்கிலத் திரைப் படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 ஆங்கிலத் திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்தித்தலைப்புகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு.

## யானைகளின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களது கோரிக்கையை மிகுந்த அனுதாபத்துடன்கேட்டறிந்த அரசாங்க அதிபர்; மதவாச்சி யானைகளை கண்டு சுட்டுக் கொல்லுமாறு சம்பந்தப்பட்ட யானை சுடும் அதிகாரிகளுக்கு நேற்றைய தினம் உத்தரவு பிறப்பித்தார்.

## வாழ்த்து உபசார வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரி உபஅதிபர் திருமதி ஆ. நாகரத்தினம் கல்விச்சேவையில் இருந்து இளைப்பாறுகிறார். இவருக்கு இக்கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வாழ்த்துபசார வைபவமொன்றை கல்லூரியில் நடத்தவுள்ளது.

## நடத்துனரின் முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸில் கண்டெடுத்த கைக்கடிகாரம் ஒன்றை பஸ்நடத்துனர் உரியவரிடம் ஒப்படைத்து முன்மாதிரி காட்டியுள்ளார்.

கல்லுண்டாயைச் சேர்ந்த டாக்டர் கே. குகராசா என்பவர் தனது கைக்கடிகாரம் கைதவறி விழுந்துவிட்டதைத் தொடர்ந்து யாழ் மத்திய பஸ்நிலையத்தில் விசாரித்தபோது பஸ்நடத்துனர் ஒருவரிடம் பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட மணிக்கூடு ஒன்று இருப்பதாக கூறினார்களாம். இதைத் தொடர்ந்து ரி. அருளானந்தம் என்ற குறித்த நடத்துனரைச் சந்தித்தபோது எதுவித சன்மானமும்பெற மறுத்துவிட்ட அவர் கடிகாரத்தை உரியவரிடம் ஒப்படைத்துள்ளார்

'ஈழநாடு' காரியாலயம் வந்திருந்த கைக்கடிகாரத்தைத் தொலைத்த டாக்டர் நடத்துனரின் முன்மாதிரியைப் பாராட்டினார்.

## 40 பழைய பஸ்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்திருந்தார்

வெளிநாடு சென்று இவ்வாரம் நாடுதிரும்பிய போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச் முகம்மட் கடந்த செவ்வாய்க்கிழமை சர்வகட்சி மகாநாட்டில் கலந்து கொண்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு ஏற்பட்டிருக்கும் பஸ் தட்டுப்பாடு குறித்து விளக்கி பழைய பஸ்களை மீண்டும் அனுப்பி வைப்பதுடன் பல புதிய பஸ்களையும் உடன் அனுப்பி போக்குவரத்துக் கஷ்டங்களையும் குறைக்குமாறு கேட்டிருந்தார்

சர்வகட்சி மகாநாடு முடிந்த பின்னரும் இப்பிரச்சினை பற்றி திரு அ. அமிர்தலிங்கம் வலியுறுத்தியபோது, இதுசம்பந்தமாக தாம் உடனடியாகக் கவனம் செலுத்துவதாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவரப்பட்ட 40 பழைய பஸ்களுடன் பத்து புதிய பஸ்களையும் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

## ஆயுள்வேத மருந்துகள் வருகின்றன

(சாவகச்சேரி)

நீண்டகால இடைவெளியின் பின்னர் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்குக் கொழும்பு மருந்தகக் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா 75,000 பெறுமதியான ஆயுள்வேத மருந்துகள் அடுத்த வாரம் கைதடிக்கு வரவுள்ளன.

ஆயுள்வேத வைத்தியசாலையின் பிரதம பொறுப்பதிகாரி டாக்டர்திருமதி சத்தியநாதன் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிகாரணமாக இம்மருந்துகள் இங்கு வரவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## யாருடையது

யாழ் நாவலர் வீதியைச் சேர்ந்த திரு. மூர்த்திஐயர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயர் நாராயண ஐயரின் அடையாள அட்டையையும், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. ஸ்ரீ ஜெயக்குமார் என்பவர் திரு கணேந்திரன் பாலசுப்பிரமணியத்தின் அடையாள அட்டையையும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## இளைஞர்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழ்மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை ஆனால் இந்த நாடு ஆக்கிரமிக்கப்படுவதை நாம் அனுமதிக்கமுடியாது" என்றார். (வெ)

## மரண அறிவித்தல்

### மாதர் சோமு

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மாதர் சோமு காலமானார் இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், நாகராஜன் (செ. சண்முகராஜா அன் பிரதர்ஸ் கணக்காளரும்), காலஞ்சென்ற கந்தசாமி (மெக்கானிக்கர்) ஆகியோரின் தந்தையும், சேதுப்பிள்ளையின் தம்பியாரும், மகேஸ்வரியின் மாமனாரும், பிறேமலதா (லதா), பிறேமரூபன், பிறேமகாந்தன், பிறேமஜெயந்தன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

பூதவுடல் இன்று (23-3-84) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

(1546) மயிலன் ஒழுங்கை - ஆறுகால்மடம்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ... யாழ்ப்பாணம், ... மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu, Telephone: 22389—24126